بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 24.10.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 24, Oct 2014 (Tamil)

## ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் முத்தான கூற்றுகள் அடங்கிய சம்பவம்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:–

இரண்டு நாட்களுக்கு முன் அல்ஃபஸல் இன்டர்நேஷனலின் தற்போதைய வெளியீட்டுப் பிரதியை பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய சொற்பொழிவின் ஒரு பகுதி கொடுக்கப்பட்டிருந்தது. அதில் அன்னார் 1937 ஆம் ஆண்டு, தப்போது பல சஹாபாக்கள் இருக்கின்றார்கள். எனவே இவர்களிடமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிலைமைகள் மற்றும் அன்னாரின் கூற்றுக்களை ஒன்று சேர்க்க வேண்டும். ஏனென்றால் ஒரு காலம் வரும். அப்போது பல பிரச்சனைகளை தீர்வு காண இந்த விஷயங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று கவனமூட்டியிருந்தார்கள்.

நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது அல்லது அன்னார் எடுத்துக் கூறிய மற்றவர்களது விஷயங்களிலிருந்து சில விஷயங்களையும் சில சம்பவங்களையும் எடுத்துள்ளேன். அதில் போதனைகளும் உள்ளன. மேலும் சில விஷயங்களுக்கு விளக்கமும் இருக்கின்றன. சிலவற்றை நான் இன்று எடுத்துக் கூறுவேன். ஒரு குறிப்பான தலைப்பு மட்டுமல்ல. மாறாக, பல்வேறு சம்பவங்கள் இருக்கின்றன. இன்ஷா அல்லாஹ் இனி வரக்கூடிய காலங்களிலும் சூழ்நிலைக்கேற்ப எடுத்துக் கூறப்படும். M.T.A வில் மூலமாக உலகில் குத்பா ஜுமுஆ வை அதிகமானோர் கேட்கின்றனர் என்பதற்காகவே இந்த சம்வங்களை நான் எடுத்துக் கூறுகின்றேன். மேலும் எடுத்துக் கூறுவேன். நான் கூறியது போன்று சில பிரச்சனைகளுக்கு தீர்வு காண இந்த விஷயங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு அஹ்மதி வரை இது சென்றடைவது மிகவும் அவசியமாகும். மேலும் குத்பா தான் இதற்குரிய சிறந்த வழியாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு முறை ஒரு நாய் எங்களுடைய வீட்டின் கதவருகே வந்தது. நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். அறைக்குள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மட்டுமே இருந்தார்கள். நான் அந்த நாயைப் பார்த்து திப்பு, திப்பு என்று கூறினேன். ஹஸ்ரத் சாஹிப் மிகவும் கோபத்துடன் வெளியே வந்து, உனக்கு வெட்கம் இல்லையா? ஆங்கிலேயர்கள் பகைமையின் காரணமாக ஒரு உண்மையான முஸ்லிமின் பெயரை தன்னுடைய நாயின் பெயராக வைத்தார்கள். மேலும் நீங்கள் நாயைப் பார்த்து அவர்கள் வைத்த பெயரையே கூறி அழைக்கின்றீர்கள். இனி இவ்வாறு செய்யக் கூடாது என்று நான் எச்சரிக்கின்றேன் என்று கூறினார்கள். எழுதுகின்றார்கள். எனக்கு அப்போது வயது 8 அல்லது 9 ஆக இருக்கும். அந்த நாள் தான் என்னுடைய உள்ளத்தில் திப்பு சுல்தானுடைய கண்ணியம் ஏற்பட்டது. நான் சுல்தான் திப்புவின் தியாகங்கள் வீணாகவில்லை என்பதை உணர்ந்தேன். இறைவன் அவருடைய பெயரை எந்த அளவு கண்ணியப்படுத்தினான் என்றால் இறைவனால் அனுப்பப்பட்டவர், காலத்தின் இமாம் அவரை கண்ணிப்படுத்துகின்றார். அவருக்காக ரோஷத்தை வெளிப்படுத்துகின்றார். மேலும் அன்னார் எழுதுகின்றார்கள். இந்த சம்வத்திலிருந்து எங்கு குழந்தையின் எந்தவொரு செயலையும் பாகுபாடின்றி சகித்துக் கொள்வது என்பது சரியானதல்ல என்ற விஷயம் புலனாகின்றதோ அங்கு ஹஸ்ரத் சாஹிபின் எல்லையற்ற மார்க்கம் மற்றும் சமுதாயத்தின் மீதுள்ள பற்றும் நமக்கு தென்படுகின்றது. அந்த குழந்தை

அன்னார் முயற்சி செய்து எழுதிய விலைமதிப்பற்ற பக்கங்களை அதற்காக அவர்கள் எவ்வளவு மணி நேரத்தையும் இரவையும் செலவழித்தார்கள் என்பதை இறைவனே நன்கறிவான். எரித்து சாம்பலாக்கி விட்டது. அவனுடைய இந்த செயலை அன்னார் பொருத்துக் கொண்டார்கள். இதன் விளைவாக மீண்டும் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை அவர்கள் நினைத்துக் கூட பார்க்கவில்லை. அன்னார் ஆதாரமாக கூறக்கூடிய இச்சம்பவம் ஒரு முறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் விளையாட்டுத்தனமாக ஹஸ்ரத் சாஹிபின் நூற்களின் முழுப் பக்கங்களையும் எரித்து விட்டார்கள். ஆனால் இந்த விஷயத்தில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் எதுவுமே கூறவில்லை. அன்னார் கூறுகின்றார்கள். இதை ஹஸ்ரத் சாஹிப் பொருத்துக் கொண்டார்கள். ஆனால் ஒரு சமுதாய தலைவரை அவமதிக்கும் செயலை அன்னாரால் பொருத்துக் கொள்ள இயலவில்லை. கூறினார்கள். ஒரு சமுதாய முஸ்லிம் தலைவர் மார்க்க பற்றின் காரணமாக ஷஹீதானார். அவருக்கு இஸ்லாத்துடனான தொடர்பேயன்றி வேறெந்த தொடர்பும் இல்லை. அவருடைய பெயரை ஒரு குழந்தை அறியாமையினால் கூறிய காரணத்தினால் அவருக்கு அவப்பெயர் ஏற்படுகின்றது. இதை அன்னாரால் பொருத்துக் கொள்ள இயலவில்லை. இந்த சம்பவத்திலிருந்து ஹஸ்ரத் சாஹிப் ஆங்கிலேயேரின் கைக்கூலி என்று ஆட்சேபணை செய்கின்றவர்களுக்கும் ஒரு படிப்பினை இருக்கின்றது. ஆங்கிலேயர்களின் முன் தலை குனிவதற்கு பகரமாக ஆண்மகனைப் போல் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்ததன் காரணமாகவே சுல்தான் ஃபதஹ் அலி திப்புவிற்கு சமுதாயப் பற்றின் காரணமாகவே கண்ணியம் கொடுத்தார்கள். இது போன்ற ரோஷம் கொண்ட மனிதர் தொடர்பாக அவர் அண்ணிய சமுதாயத்தின் கைக்கூலி என்ற சந்தேகத்தைக் கூட உள்ளத்தில் எவ்வாறு கொண்டு வர இயலும் ?

இன்னொரு இடத்தில் அன்னார் கூறுகின்றார்கள். அதாவது எந்த தாய் தந்தையர்கள் தன்னுடைய குழந்தைகளை ஜமாஅத்தாக தொழுவதன் பழக்கத்தை ஏற்படுத்துவதில்லையோ எனது பார்வையில் அந்த தாய் தந்தையர்களை விட குழந்தைகளுக்கு பெரிய எதிரி வேறு யாரும் கிடையாது. எனக்கு என்னுடைய ஒரு சம்பவம் நினைவிருக்கின்றது. அதாவது ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சற்று நோய்வாய்பட்டதன் காரணமாக ஜுமுஆ தொழுகைக்கு பள்ளிவாசலுக்கு செல்ல இயலவில்லை. நான் இப்போது வயதை எட்டியவர்கள் மீது கடமையாக்கப்பட்டவைகள் என் மீதும் கடமையாவதற்கு நான் பெரியவனாகவும் இல்லை. சிறிய குழந்தையாக இருந்தேன். ஜுமுஆ தொழுவதற்காக பள்ளிக்கு வந்து கொண்டிருந்தேன். ஒருவர் என்னை சந்தித்தார். அப்போது சிறிய வயதின் காரணமாக அவருடைய உருவம் அந்த நேரத்தில் நினைவில் இருக்கவில்லை. ஆனால் இந்த சம்பவத்தின் தாக்கம் எந்த அளவுக்கு என் மீது ஏற்பட்ட தென்றால் இப்பொழுது வரை அந்த மனிதனுடைய உருவம் எனக்கு நியாபம் இருக்கின்றது. முஹம்மது பக்ஷ் அவருடைய பெயராகும். அவர் இப்போது காதியானில் இருக்கிறார். நான் அவரிடம் கேட்டேன். நீங்கள் திரும்பி வருகின்றீர்களே. தொழுகை முடிந்து விட்டதா ? அதற்கு அவர், மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். பள்ளியில் இடமில்லை என்று அவர் பதில் கூறினார். நான் திரும்பி வந்துவிட்டேன். நானும் இந்த பதிலைக் கேட்டு திரும்பி வந்துவிட்டேன். மேலும் வீட்டில் வந்து தொழுதேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதைப் பார்த்து விட்டு பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக ஏன் செல்லவில்லை என்று என்னிடம் கேட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் நான் சிறு வயதிலிருந்தே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நபி என்ற முறையில் கண்ணியமளித்து வந்தேன். அன்னார் வினவுவதில் ஒரு கடினம் இருப்பதையும் மேலும் அன்னாருடைய முகத்தில் ஒரு கோபம் இருப்பதையும் நான் கண்டேன். அன்னார் இவ்விதத்தில் கேள்வி கேட்டது என்மீது ஒரு தாக்கத்தை ஏற்பட்டது. நான் பள்ளிக்கு சென்றேன். ஆனால் அங்கு இடம் இல்லாததனால் திரும்பி வந்து விட்டேன் என்று பதில் கூறினேன். அன்னாரை இதைக் கேட்டு மவுனமாகி விட்டார்கள். ஆனால் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் ஜுமுஆ தொழுதுவிட்டு அன்னாரை நலம் விசாரிப்பதற்காக வந்த போது எல்லாவற்றிற்கும் முதலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாரிடம் இன்று பள்ளிவாயிலில் அதிகமான மக்கள் இருந்தார்களா என்று கேட்டார்கள். அப்போது என்னுடைய உள்ளத்தில் ஒரு பயம் ஏற்பட்டது. ஏனென்றால், நான் பள்ளிவாசலுக்கு செல்லவில்லை. கூறியவருக்கு

தவறு ஏற்பட்டதா ? அல்லது அவர் கூறியதை புரிவதில் எனக்கு தவறு ஏற்பட்டதா ? என்று எனக்கு தெரியவில்லை. நான் அவர் கூறியதிலிருந்து பள்ளிவாசலில் இடம் இல்லை என்பதை மட்டும் புரிந்தேன். ஒருவேளை புரிதலில் எனக்கு தவறு ஏற்பட்டாலோ அல்லது கூறக்கூடியவருக்கு தவறு ஏற்பட்டாலோ ? இவ்விரு நிலையிலும் குற்றம் நான் பொய் கூறியதாக குற்றம் என்னையே சாரும் என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் ஆம் ஹுஸூர்! இன்று உண்மையிலலே மக்கள் அதிகமாக இருந்தார்கள் என்று பதில் கூறினார்கள். மவ்லவி சாஹிப் அவர்களின் நாவிலிருந்து இதை உறுதிபடுத்தி இறைவன் நான் நிரபராதி என்பதற்கான ஏற்பாட்டைச் செய்தானா ? அல்லது உண்மையிலேயே அன்று வழக்கத்திற்கு மாறாக அதிகமான மக்கள் வந்திருந்தார்களா ? என்ற உண்மை எனக்கு இப்போதும் தெரியாது. எவ்வாறிருப்பினும் இந்த சம்பவத்தினுடைய ஆழமான தாக்கம் இன்றும் என்னுடைய உள்ளத்தில் உள்ளது. இதிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தாக தொழுவதை எந்த அளவிற்கு கருத்தில் கொண்டார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம்.

மேலும் கூறுகின்றார்கள். ஒரு முறை தாய் வழிப் பாட்டனார் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்கள் எனக்கு உருது தேர்வெடுத்தார்கள். அப்போதும் என்னுடைய கையெழுத்து மிகவும் மோசமாக இருந்தது. கையெழுத்து எந்த அளவு மோசமாக இருந்ததென்றால் அதனை படிக்கக்கூட முடியாது. ஆனால் அவர்கள் அதிகமாக முயற்சி செய்து என்னுடைய கையெழுத்தை படிக்க அதிகமாக முயற்சி செய்தார்கள். ஆனாலும் அவர்களால் அதனை படிக்க முடியவில்லை. மேலும் அவர்களது இயல்யில் சற்று வேகம் இருந்தது. உடனடியாக கோபமடைந்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் சென்று விட்டார்கள். அந்த நேரத்தில் நானும் எதிர்பாராத விதமாக வீட்டில் தான் இருந்திருந்தேன். நாங்கள் அவர்களின் அந்த இயல்பினால் அஞ்சுவோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் என்னைப் பற்றிய குற்றச்சாட்டினை எடுத்து சென்றதானல் இப்போது என்ன நடக்குமோ என்ற அச்சம் இன்னும் அதிகமானது. எவ்வாறிருப்பினும் மீர் சாஹிப் அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கூறினார்கள். அதாவது நீங்கள் மஹ்மூதின் கல்வியின் பக்கம் கொஞ்சம் கூட கவனம் செலுத்துவதில்லை. நான் அவரிடம் உருதுவிற்கான ஒரு தேர்வை நடத்தினேன். நீங்கள் அந்த தேர்வுத் தாளினையும்,அவரது கையெழுத்து எந்த அளவு மோசமாக இருக்கிறது என்பதையும் சற்று பாருங்களேன் என்று கூறினார்கள். மேலும் அதே வேகத்தில் அன்னாரிடம், நீங்கள் சற்றும் அக்கறை காட்டுவதில்லை. மேலும் அவரது வயதும் கடந்து கொண்டே இருக்கின்றது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீர் சாஹிப் அவர்களின் இந்த உணர்ச்சி நிலையை கண்டு ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களை அழையுங்கள் என்று கூறினார்கள். மேலும் எப்போதெல்லாம் ஏதாவதொரு விஷயத்தில் தாங்களுக்கு கஷ்டம் ஏற்பட்டாலும் அன்னார் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை அழைப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். மேலும் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் என்மீது மிகவும் அன்பு செலுத்தக்கூடியவர்களாக இருந்தார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் தமது வழக்கத்திற்கேற்ப ஒரு ஓரத்தில் ஒதுங்கி தலை குனிந்தவாறு நின்றார்கள். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்பு ஒருபோதும் தலையை உயர்த்துவதில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். மவ்லவி சாஹிப்! நான் உங்களை மீர் சாஹிப் அவர்கள் மஹ்மூதின் கையெழுத்து மிகவும் மோசமாக உள்ளது. அதனைப் படிக்க முடியவில்லை என்று கூறுகின்றார்கள். இதற்காகவே நான் உங்களை அழைத்திருக்கின்றேன். எனது விருப்பம் என்னவென்றால் நீங்கள் அவரை பரிசோதியுங்கள். இவ்வாறு கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பேணாவினை எடுத்து இரண்டு அல்லது மூன்று வரிகளில் ஒரு சில வார்த்தைகளை எழுதி என்னிடம் கொடுத்து இதனை நான் எழுதியது போன்றே எழுதுங்கள் என்று கூறினார்கள். இந்த தேர்வினையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம் நடத்தினார்கள். நான் மிகவும் கவனத்துடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும் அதனை அவ்வாறே எழுதினேன். முதலில் அந்த வாக்கியங்கள் மிகவும் நீண்டதாக இருக்கவும்

இல்லை. இரண்டாவது நான் அதனை அப்படியே எழுத வேண்டியது தான் இருந்தது. ஆக, அப்படியே எழுதுவது மிகவும் எளிதானதாகும். பின்னர் மெதுவாக அதனை அப்படியே எழுதினேன். அலிஃப் மற்றும் பே போன்றவற்றினை மிகவும் கவனத்துடன் எழுதினேன். பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதனைப் பார்த்து மீர் சாஹிப் அவர்கள் கூறிய விஷயத்தினால் கவலை ஏற்பட்டு விட்டது. ஆனால் அவருடைய கையெழுத்தினை பார்த்து அது என்னுடைய கையெழுத்தோடு ஒப்பானதாக இருக்கிறது என்று கூறினார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஆரம்பத்திலிருந்தே என் பக்கம் இருந்தார்கள். கூறினார்கள். மீர் சாஹிப் அவர்கள் உணர்ச்சிவசப்படுவார்கள். ஆனாலும் இவருடைய கையெழுத்து நன்றாகத் தான் இருக்கின்றது.

மேலும் கூறுகின்றார்கள். எதிர்ப்பு ஜமாஅத்திற்கு ஏற்படுகின்றது. நபிக்கும் ஏற்படுகின்றது. இவைகளே வளர்ச்சிக்கான வழிவகைகளாகவும் ஆகின்றன. இதனைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து ஒரு சம்பவத்தினை பல முறை நாங்கள் கேட்டதுண்டு. தாங்கள் கூறி வந்தார்கள். அதாவது எதிரி எப்போது நம்மை நோக்கி தீய வார்த்தைகளை பேசுகின்றார்களோ மேலும் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்களோ அப்போது தான் நமக்கு அவர்களிலிருந்து நல்லியல்பு கொண்ட ஆன்மாக்கள் நம் பக்கம் வரும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. மேலும் மக்கள் நம்மை நோக்கி தீய வார்த்தைகள் பேசாத போது மேலும் எதிர்ப்புகள் தெரிவிக்காத போது மேலும் அமைதியாக இருக்கின்ற போது இவ்வாறான விஷயம் நமக்கு மிகவும் துக்கத்தை கொடுக்கின்றது. அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள். நபியினுடைய உதாரணம் ஒரு பிரபலமான பைத்தியம் பிடித்த மேலும் ஊரிலுள்ள குழந்தைகள் தொந்தரவு செய்யக்கூடிய வயது முதிர்ந்த கிழவியைப் போன்றதாகும். மேலும் அந்த கிழவி அவர்களைப் பார்த்து தீய வார்த்தைகளை பேசுவதும், சாபமும் இடுவதுண்டு. இவ்வாறான நிலையில் அந்த குழந்தைகளின் பொற்றோர்கள் குழந்தைகளை அந்த கிழவிக்கு தொந்தரவு கொடுப்பதிலிருந்து அவர்களை தடுக்க ஒரு திட்டம் தீட்டினார்கள். ஆகையால், அந்த பெற்றோர்கள் குழந்தைகளுக்கு புத்திமதி கூறினார்கள். ஆனால், குழந்தைகள் குழந்தைகள் தானே! அவர்கள் எப்போது சொல் பேச்சு கேட்டார்கள். இந்த முயற்சியிலும் வெற்றி கிடைக்கவில்லை. இறுதியில் அந்த குழந்தைகளின் பெற்றோர் குழந்தைகளை வெளியே அனுப்பாமல் கதவை மூடி வைக்க தீர்மானித்தார்கள். இறுதியில் அவர்கள் அவ்வாறே செய்தார்கள். மேலும் இரண்டு, மூன்று நாட்கள் குழந்தைகள் வெளியே செல்லாததால் அந்த கிழவி குழந்தைகள் தொந்தரவு செய்யவில்லை என்பதனால் அந்த ஒவ்வொரு குழந்தைகளின் வீட்டிற்கும் சென்று, உங்களது குழந்தை எங்கே சென்று விட்டது ? குழந்தைகளை பாம்பு கடித்துவிட்டதா? அல்லது பேதியினால் மரணித்து விட்டார்களா ? அல்லது அவர்கள் மீது மேற்கூரை விழுந்து மரணித்து விட்டார்களா ? அல்லது அவர்களை மின்னல் தாக்கி விட்டதா? என்று கேட்டாள். ஆக, இவ்வாறு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று இவ்வகையான விஷயங்களை பேசினாள். இறுதியில் இந்த கிழவி முன்பை விட அதிகமாக தீய வார்த்தைகளை பேசவும், சாபமிடவும் தொடங்கிவிட்டாள். எனவே, குழந்தைகளை வீட்டில் அடைத்து வைப்பதனால் என்ன பலன் என்று  மக்கள் கருதினார்கள். மேலும் அவர்கள் குழந்தைகளை வெளியே விட்டு விட்டார்கள். மேலும் எப்போது எதிர்ப்பு உச்ச கட்டத்தில் இருக்கும் போதும் அவர்களுக்கு கஷ்டம் இருக்கின்றது. மேலும் எப்போது எதிர்ப்பு இல்லாமல் இருக்குமோ அப்போதும் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகின்றது. ஏனென்றால், எப்போது எதிர்ப்பு இருக்காதோ  அப்போது மக்களுடைய கவனம் இறை அமைப்பின் பக்கம் இருப்பதில்லை. இவ்வாறான நிலையே நபிமார்களுக்கும் ஏற்படுவதுண்டு என்று அன்னார் கூறி வந்தார்கள். நபிமார்கள் ஏசிப் பேசுவதில்லை. நபிமார்கள் எந்த சமயத்திலும் மற்றவர்களுக்காக துஆக்கள் செய்யக் கூடியவர்களாகவே விளங்குகின்றார்கள். இவ்வாறு அவர்களிலிருந்து நல்லியல்பு கொண்ட ஆன்மாக்கள் உண்மையினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக எதிர்ப்பு உச்ச கட்டத்தில் இருக்கும் போதும் எதிரிகளுக்காக துஆவையே செய்கின்றார்கள்.

பிறிதோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள். இறைவனின் அருள் நதியைப் போன்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த நதியிலிருந்து ஒரு சொட்டு தண்ணீர் எடுப்பதனால் அதில் எவ்வித

குறைபாடும் ஏற்படுவதில்லை. ஆனால் மனிதன் தன்னைத் தானே இறைவனது அருட்கொடைகளை விலக்கி வைத்துக் கொள்கின்றான். மேலும் அதிலிருந்து தனது முகத்தை திருப்பி விடுகின்றான். மேலும் எப்போது இறைவன் புறமிருந்து அனுப்பப்படுவாரோ அவன் அவர்களை ஏளனமாகக் கருதி அவர்களை நிராகரித்து விடுகின்றார்கள். மேலும் எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் பாபா நானக் அவர்களின் தாய் தந்தை தற்போது உயிர் பெற்று உலகிற்கு வந்து அவரைப் பார்த்தால் நாம் எந்த சிறுவனை ஏளனமாக கருதினோமோ அவனுக்காக இலட்சக்கணக்கான மக்கள் அர்ப்பணமாகின்றனர் என்பதை கண்டு கொள்வார்கள். மேலும் அவரது பெயரில் உயிரை மாய்ப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்பதையும், அவர்களில் பலர் கோடீஸ்வரர்களாகவும் என்பதையும் அறியும் போது அவர்கள் வியந்து விடுவார்கள். ஆனால் மக்கள் தன்னுடைய அறீவீனத்தின் காரணமாக இவர் சிறிய மனிதர், மேலும் நாம் அவரை ஏற்றுக் கொண்டு என்ன செய்வது ? என்று மக்கள் கருது விடுகின்றார்கள். ஆனால் இறைவன் இவ்வாறான வெளிப்படையாக சிறுயவர்களாக கருதப்படக் கூடியவர்களையே அனுப்புகின்றான். மேலும் ஒரு காலம் வரும் போது அவரின் பெயரில் உயிரை மாய்க்கக்கூடிய லட்சக்கணக்கானோர் தோன்றி விடுகின்றனர். மேலும் அன்னார் கூறிகின்றார்கள். இவ்வாறே காதியானில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான். ஆரம்ப காலத்தில் காதியானில் ரயில் இருந்ததில்லை. தபால் நிலையம் இருந்தில்லை. மேலும் மார்க்க மற்றும் உலக கல்விக்கான பாட சாலைகள் இருந்ததில்லை. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எவ்வித உலகப் புகழும் இருந்ததில்லை. மேலும் அன்னார் கற்ற கல்வியும் வெளிப்படையாக குறைவாகவே இருந்தது. இதனால் தான் மஸீஹ் மற்றும் மஹ்திக்கான வாதம் புரிந்த போது நவூதுபில்லாஹ் இந்த மனிதர் முட்டாளாவார். இவ்வாறு எவ்வாறு மஹ்தியாக இருக்க முடியும் என மக்கள் கூச்சலிட்டனர். மேலும் மக்கள் இவ்வாறான சிறிய கிராமத்தில் எவ்வாறு இறைவன் புறமிருந்து வர முடியும் என்றும் கூறினார்கள். இறைவன் புறமிருந்து ஒருவர் வருவதாக இருந்தால் அவர் லாஹூர், அமிர்தசரஸ் போன்ற பெரிய நகரங்களில் வந்திருக்க வேண்டும் எனவும் கூறினர். ஆக, மக்கள் கடுமையாக எதிர்த்தனர். மேலும் யாரெல்லாம் அன்னாரது வாதத்தினை கேட்டு அன்னாரை சந்திப்பதற்காக காதியான் வர எண்ணினார்களோ அவர்களும் தடுக்கப்பட்டு வந்தனர். மேலும் அவர்கள் செல்வதை தவிர்க்கவில்லை என்றால் பலவிதமாக இன்னல்களை கொடுத்து வந்தார்கள். மேலும் அவர்கள் பல்வேறு விதமான துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். மேலும் இவை அனைத்தும் இருந்தும் கூட அன்னாருக்கு இறைவன் புறமிருந்து, உலகில் ஓர் எச்சரிப்பாளர் வந்தார். ஆனால் உலகமோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மேலும் வலுவான தாக்குதல்களின் மூலமாக அவருடைய உண்மையை வெளிப்படுத்துவான் என்ற இறையறிவிப்பு இறங்கியது. இந்த இறையறிவிப்பு ஒரு மனிதர் கூட அன்னாரை ஏற்றுக் கொள்ளாத போது அருளப்பட்டதாகும். பின்னர் நான் உமது தூதுச் செய்தியை உலகின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்றும் இறையறிவிப்பு அருளப்பட்டது. அந்த கால கட்டத்தில் எதிர்ப்பு எந்த அளவுக்கு இருந்ததென்றால், பீரா என்ற பெயருடைய அன்னாரின் பணியாளர் ஒருவர் இருந்தார். அவர் மண்ணெண்ணையை குழம்பில் ஊற்றி சாப்பிடக்கூடிய அளவிற்கு முட்டாளாக விளங்கினார். அவரை அன்னார் சில நேரங்களில் ஏதேனும் பணிக்காக படாலா அனுப்பி வந்தார்கள். ஒரு முறை அவரை படாலா அனுப்பிய போது அஹலே ஹதீஸின் தலைவராகிய மவ்லவி முஹம்மது ஹுஸைன் படாலவி அவரை சந்தித்தார். அவருடைய வேலையே காதியான் வரக்கூடியவரை படாலாவிலேயே தடுத்து நிறுத்துவது மட்டுமல்லாமல் காதியானிலிருந்து படாலாவிற்கு வரக்கூடியவர்களை சந்தித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடை திறந்துள்ளார்கள். அவர் பொய்யராவார். நீங்கள் காதியான் சென்று என்ன செய்யப் போகிறீர்கள் ? என்று கூறி வந்தார். இருப்பினும் மக்கள் காதியான் வந்து சென்று கொண்டிருந்தார்கள். மேலும் மவ்லவி சாஹிப் தடுத்து நிறுத்தியும் வந்து கொண்டிருந்தார்கள். அன்றைய நாள் மவ்லவி சாஹிப்பிற்கு பீராவைத் தவிர வேறு யாரும் கிடைக்கவில்லை. மவ்லவி சாஹிப் பீராவிடம், பீரா! நீ அவரோடு இருக்கக் கூடாது. உன்னுடைய ஈமானை ஏன் நீ வீணாக்குகிறாய் என்று கேட்டார். அந்த அப்பாவி அவர் கூறிய

விஷயத்தித்தை புரிய முடியவில்லை என்றாலும் மிர்ஸா சாஹிபோடு இருப்பது சரியில்லை என்று கூறுகிறார் என்பதை மட்டும் நன்றாக புரிந்து கொண்டார். மல்லவி சாஹிப் அனைத்தையும் கூறி முடித்த பிறகு அவர், மல்லவி சாஹிப்! நான் ஒரு அறிவினவனாவேன். என்னால் இவ்வாறான விஷயங்களை புரியவும் இயலாது. ஆயினும், நீங்கள் மிர்ஸா சாஹிப் தீயவராவார் என்று கூறுகின்றீர்கள். ஆனால் நீங்கள் அனுதினமும் படாலாவைச் சுற்றி வந்து மக்களிடம் எவரும் காதியான் செல்ல என்றும் கூறியும், மற்ற பகுதிகளிலிருந்து வருகின்ற மக்களை தடுக்கவும், தூண்டவும் செய்கின்றீர்கள் என்பது மட்டும் எனக்கு புரிகின்றது. ஆனால் இறைவன் அவரோடு இருக்கின்றான். உங்களோடு இல்லை என்பது மட்டும் எனக்கு தெளிவாக புரிகின்றது. ஏனென்றால், உங்களுடைய அனைத்து முயற்சிகளுக்கு பிறகும் கூடி நூற்றுக்கணக்கான மக்கள் காதியானுக்கு நடந்தே செல்கின்றனர். ஆனால் உங்களிடம் யாருமே வருவதில்லை.

மேலும் கூறுகின்றார்கள். நம்முடைய ஜமாஅத்தின் இன்னொரு கண்ணியத்திற்குரிய நபர் சாஹிப் ஸாதா அப்துல் லதீஃப் சாஹிப் ஷஹீதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தைக் கேட்டு காதியான் வந்த மக்களைச் சார்ந்தவராகவே இருந்தார். அவர் ஹஜ் செய்வதற்காக வீட்டிலிருந்து கிளம்பி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தைக் கேட்டு காதியான் வந்து பைஅத் செய்தார்கள். பைஅத் செய்த பிறகு வீட்டிற்கு திரும்பி சென்ற போது ஆப்கானிஸ்தானின் அரசர் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக மட்டும் கல்லெறிந்து கொல்லும் தண்டனையை பிறப்பித்தார். மக்கள் அவர்களிடம் தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளுமாறு அதிகமதிகமாக வற்புறுத்தினார்கள். ஆனால் அவர்களோ தங்களுடைய கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை. ஏனென்றால் அவர்கள் மீது உண்மை வெளிப்பட்டுவிட்டிருந்தது. இறுதியில் மன்னர் அன்னாரை மண்ணில் புதைத்து கல்லெறிந்து கொலை செய்துவிட்டார். மேலும் கருணையற்ற முறையில் ஷஹீதாக்கினான். ஆனால் அவர்கள் ஆ என்று கூட கூறவில்லை. மேலும் இறைவழியில் தன்னுடைய உயிரை துறந்தார்கள். கல்லெறிவதற்கு முன்பு ஒரு அமைச்சர் அன்னாரிடம் வந்து நீங்கள் உங்களுடைய உள்ளத்தில் வேண்டுமானால் அதே கொள்கையை வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் வெறும் நாவளவில் மட்டும் அதனை மறுத்து விடுங்கள் என்று கூறினார். ஆனால் அன்னாரோ நான் பொய் கூற மாட்டேன் என்று கூறிவிட்டார்கள். அன்னாரை ஷஹீதாக்கினார்கள். அன்னாரை ஷஹீதாக்கிய சில நாட்களிலேயே ஆப்கானிஸ்தானில் காலரா பரவியது. மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் மரணித்துவிட்டார்கள். இப்போதும் அழிவு பரவிக் கொண்டிருப்பதைப் பாருங்கள்.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியிடமும் மார்க்க ரோஷத்தை ஏற்படுத்துவானாக. இறைவனோடுள்ள தொடர்பை வலுப்படுத்துவானாக. மேலும் பொறுமை மற்றும் மன உறுதிப்பாட்டை வழங்குவானாக. மேலும் மனித குலத்தை பாதுகாப்பதற்காக துஆ செய்யும் நல்வாய்ப்பினையும் வழங்குவானாக. நம்முடைய ஆணவத்தின் மீது நம்முடைய பணிவை மேலோங்கச் செய்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக. மேலும் முழுமையான முறையில் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப நடத்துவானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நம்முடைய பொறுப்பை நிறைவேற்றுபவர்களாக ஆக்குவானாக. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டவர்களிடம் எதிர்பார்த்தவற்றையும், விரும்பியவற்றையும் பேசக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக.

---

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 24.10.14
Summarized by Nazarath Nashr-O-Isha'ath,Qadian
Tamil Translation : Moulavil. M.B. Tahir Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516

---